IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.401/2026

Deposition of Witness PW3

| | | | |
|---|---|---|---|
| Name | : மகேஷ்வரி | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் நாமக்கல் பள்ளிபாளையத்தில் வசித்து வந்து தறிப்பட்டறையில் வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் கல்பனா எனது சகோதரி ஆவார். எனது சகோதரி கல்பனா, அவரது கணவர் ஆகியோர் கல்யாணத்திற்காக சென்னையில் இருந்து நாமக்கல் வந்து திருமண நிகழ்வை முடித்துவிட்டு பாலக்காட்டில் உள்ள அவரது சித்தி வீட்டுக்கு ரயிலில் 21.08.2025 அன்று சென்றார்கள். அன்றைய தினம் 3-3.30 மணியளவில் எனது சகோதரி எனக்கு போன் செய்து அவரது கணவரை கண்ணாடி கிளாஸ்சால் ஒரு நபர் குத்திவிட்டதாகவும், அப்போது ரயில் பெருந்துறை அருகில் இருப்பதாகவும் சொன்னார்.

எனக்கு போன் வந்தவுடன் நானும் எனது கணவரும் பெருந்துறை மருத்துவமனைக்கு சென்றோம். நான் மருத்துவமனை சென்றபோது எனது சகோதரி அங்கு இல்லை. புகார் கொடுப்பதற்காக காவல் நிலையம் சென்று இருந்தார். பிறகு எனது சகோதரியின் கணவரை ஈரோடு எமர்ஜென்சி கேர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து அங்கு ஒரு

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.06.29 18:37:25 +0530

வாரம் அவர் சிகிச்சையில் இருந்தார். அதன் பிறகு மீண்டும் செந்தில் ஸ்பெசலிட்டி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டு அங்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு ஒரு வாரம் சிகிச்சையில் இருந்தார். அதன் பிறகு காவல் நிலையத்தில் இருந்து வந்து பார்த்து எங்களை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 4.00 மணி அளவில் பெருந்துறை மருத்துவமனையில் சென்று பார்த்தேன். என்னை கேர் 24 மருத்துவமனையில் வைத்து போலீசார் விசாரித்தனர். அன்றைய தினம் இரவே போலீசார் விசாரித்தனர். சாட்சி மீண்டும் அடுத்த நாள் என கூறுகிறார். எனக்கு நேரடியாக வழக்கு சம்பவம் பற்றி தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.29 18:37:34 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.401/2026

Deposition of Witness PW4

| | | | |
|---|---|---|---|
| Name | : நபிபாஷா | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.06.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் ஈரோடு முத்தம்பாளையம் ஹவுசிங் யூனிட்டில் குடியிருந்து வந்து ஆம்புலன்ஸ் டிரைவராக வேலை செய்து வருகிறேன். 11.09.2025 என்று மதியம் 12.30 மணியளவில் நான் ஈரோடு அரசு மருத்துவமனையில் இருந்த போது போலீசார் வந்து ஹிந்தி தெரிந்த நபர் யாராவது உள்ளார்களா என்று என்னிடம் கேட்டார்கள். நான் எனக்கு ஹிந்தி தெரியும் என்று போலீசாரிடம் சொல்லி அவர்களுடன் அரசு மருத்துவமனை உள்ளே சென்றேன். அங்கு ஹிந்தி தெரிந்த ஒரு நபர் உட்கார்ந்து இருந்தார். அப்போது போலீசார் என்னிடம் அந்த நபர் ஹிந்தியில் சொல்வதை எங்களிடம் தமிழில் சொல்லுமாறு கூறினார்கள். அந்த நபரின் பெயர் என்னவென்று கேட்டபோது பிமல் முர்மு என்று கூறினார்.

அவர் 20 நாட்கள் முன்பு ஜெய்ப்பூர் எக்ஸ்பிரஸ் ரயிலில் வந்து கொண்டிருந்தபோது ஒரு கண்ணாடி கிளாசில் ஒரு நபரை குத்தி விட்டு கீழே குதித்து விட்டதாகவும், அதில் அவருக்கு அடிபட்டதாகவும், அதனால் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்திருப்பதாகவும்,

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.29 18:37:45 +0530

போலீசார் வந்து அது சம்பந்தமாக விசாரித்ததாகவும் சொன்னார். அப்போது அந்த நபர் தான் கண்ணாடி கிளாஸ்சால் குத்தியதாக கூறினார். அந்த நபர் ஹிந்தி மொழியில் கூறியதை நான் தமிழில் சொல்ல அதை போலீசார் லேப்டாப் மூலம் பதிவு செய்து பின்னிட்டு பிரிண்ட் எடுத்து வந்ததில் நான் கையொப்பம் செய்தேன். என்னுடன் போலீசார் அழைத்து வந்த ராஜ்குமார் என்ற நபரும் கையொப்பம் செய்தார்.

தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ. – 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினம் ஆஜர் எதிரியிடமிருந்து தான் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. ஆஜர் எதிரி ஹிந்தியில் சொன்னதைத்தான் நான் போலீஸாருக்கு தமிழில் மொழி பெயர்த்து கூறினேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு ஹிந்தி எழுத படிக்க தெரியும் என்றால் எழுத, படிக்க தெரியாது, பேச தெரியும். நான் ஹிந்தியில் சொன்னதை தமிழில் மொழிபெயர்த்து சொன்னதாக சொல்வது பொய் என்றும், ஒரு தாளில் போலீசார் என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டனர் என்றும் சொன்னால் சரியல்ல. பிரிண்ட் எடுப்பதற்கு முன்பே போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றதால் தான் அதில் சாட்சிகளின் கையொப்பம், எதிரியின் கையொப்பம் என எழுதப்பட்டு அதன் பிறகு கையெழுத்து பெறப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.29 18:37:51 +0530

எதிரி எனது முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதின் பெயரில் தான் நான் கையொப்பம் செய்து, அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படும் போது போலீசார் வீடியோ,ஆடியோ பதிவு செய்தார்களா என்றால் இல்லை. என்னுடன் கையொப்பம் செய்த மற்றொரு நபரும் என்னுடன் தான் கையொப்பம் செய்தார்.

எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தை என்னுடன் சாட்சி கையொப்பம் செய்த ராஜ்குமார் என்ற நபர் எழுதினாரா என்றால் இல்லை. போலீசார் தான் லேப்டாப்பில் தட்டச்சு செய்தார். நான் ஹிந்தி படிக்கவில்லை. நான் முதல் விசாரணையில் எனது முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. எதிரியை நான் பார்த்ததில்லை என்றும், இந்த வழக்கிற்காக பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.29 18:37:59 +0530